Registered ... Newspaper

உதயன்

விலை ரூ.1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கடிர்- 1 யாழ்ப்பாணம் அக்டோபர் புரட்டாதி மீ 7 செவ்வாய்க்கிழமை விஜயா 1404 முஹறறம் பிறை 18 (23-09-1986) UTHAYAN LIVELY TAMIL DAILY கதிர்- 262

யாழ்நகரில் பத்து ரெலிபோன்களை சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக ரெலிபோன் சேவையிலேயே என்னும் கருத்தும் உள்ள ஒரே ஒரு நிறுவனம்

ரெலிகுளோப்

ரெலிபோன்: 25088 - பத்து சமாந்தர இணைப்புகள்

ரெலிகுளோப்

ரெலிபோன் சேவையில் வல்லவர்கள், நல்லவர்கள்

ரெலிகுளோப்

ஆர். ஜி. கட்டடம், மிராண்டா வீதி, யாழ்நகர்.

வாகனேரியில் அப்பாவி தமிழர் 16 பேர் கொலை

தேடுதல் நடத்திய போது படையினர் அட்டூழியம்

மட்டக்களப்பு: செப். 23

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகனேரியில் ஞாயிற்றுக்கிழமையன்று பதினாறு அப்பாவித் தமிழர்களை ஆயுதப்படையினர் சுட்டுக்கொன்றனர் என்று சொல்லப்பட்டது.

போராளிகளைத் தேடி, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் கூறியே அவர்கள் இந்த அட்டூழியத்தைப் புரிந்தனர் என்றும் நம்பிக்கையாக அறியவந்தது.

கொலை செய்யப்பட்டவர்களில் பலர் இளம் குடும்பஸ்தர்கள் என்று அப்பகுதியிலிருந்து மட்டக்களப்புக்கு முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மாதாறுஒபாத் திலிடத்தின் ஒருபகுதி வாகனேரியை உள்ளடக்கி உள்ளது.

வாகரை உதவி அரச அதிபர் பிரிவுக்கீழ் இது வருகின்றது

மண்டபத்தைச் சேர்ந்த தமிழர்கள் வாகனேரியில் அதிகமான அளவில் வாழந்து வருகின்றனர்.

ஞாயிற் றுக்கிழமை மாலை ஆயுதப்படையினர் வாகனேரிக் கிராமத்தைச்சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். அப்போது நடத்திய சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில் 16 அப்பாவித் தமிழர் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று நடந்த ஹர்த்தாலில் காரணமாக போக்குவரத்து ஸ்தம்பித்தது.

இதன் காரணமாக வாகனேரி சம்பவமுழு விவரங்களும் வந்து சேரவில்லை என்று மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர் திரு. சாமு தம்பிமுத்து உதயனுக்குத் தெரிவித்தார்.

இதனிடையே வாகனேரியில் 16 நிரபராதிகளைக் கொன்றதாகவும் பெருந் தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (மு-எ)

சுபநேரம்

23—9—1986
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.32 முதல்12.02 வரை
ராகுகாலம்:
3.02 முதல் 4.32 வரை
திக்கு வாலுகம் இடக்கு வெற்றி

வார்த்திகை விரதம்

பண்ணையில் சென்ற இராணுவ வாகனங்கள் மீது தாக்குதல்

தமிழ் ஈழ இராணுவம் நடாத்தியது

யாழ்ப்பாணம், செப் 23

பண்ணைப் பாலத்தினூடாகச் சென்ற இரண்டு இராணுவ வாகனங்கள் மீது நேற்று தமிழ் ஈழ இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

நேற்றுப் பகல் ஒரு மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

இதனையடுத்து யாழ் கோட்டை முகாமில் இருந்து சோட்டமுனை பக்கம் நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது (உ - 10)

கைதிகளுக்கு ஆதரவாக கண்டன ஊர்வலம் இணைப்புக்குழு நடத்தும்

யாழ்ப்பாணம் செப் 23

பூஸா, வெலிக்கடையில் தமிழ் இளைஞர்கள் நடாத்தும் போராட்டத்திற்கு ஆதரவாக எதிர்வரும் 30 ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துவது என தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு அறிவித்திருக்கிறது.

* சிறைக் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு தமிழ் மக்களை வேண்டுவது

* நீதிமன்ற பகிஷ்கரிப்பு நடவடிக்கையினை வெற்றிகரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

* நாளை திங்கள் ஈழவர் முன்னணி நடத்தும் ஊர்வலத்திற்கு ஆதரவு வழங்குதல்.

* பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குதல்

— இவ்வாறு நேற்று நடைபெற்ற இணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ)

பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம் செப். 23

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் போராட்டத்திற்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள் கட்டம் கட்டமாக உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

இம்மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதிவரை முதற் கட்ட உண்ணாவிரதத்தை மேற்கொள்வது என்று நேற்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டது

அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பொறுப்பாக நிர்வாக குழு ஒன்றும் பிரஸ்தாப கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது

பிரஸ்தாப குழு நேற்று கூடி எடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உண்ணாவிரதப் போரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். சட்டத்தரணிகள் நாளை முதல் பகிஷ்கரிப்பு

கைதிகள் 'போருக்கு' ஆதரவாக

யாழ்ப்பாணம், செப் 28

தமிழ் பேசும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளுக்குப் அது தொடர்பான சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கும் ஆதரவு தெரிவிக்குமுகமாக யாழ் சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றப் பகிஷ்கரிப்பு செய்ய தீர்மானித்துள்ளது

நாளை (புதன்கிழமை) முதல் 29 ஆம் திகதி வரை நீதிமன்றப் பகிஷ்கரிப்பு இடம்பெறும் என்றும் யாழ் சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது

சங்கத்தின் அவசர விசேட பொதுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ் சட்ட நூலகத்தில் நடந்தது.

போராட்டம் நடத்தும் தமிழ் பேசும் அரசியல் கைதிகளின் 6 அம்சக் கோரிக்கைகள் நியாயமானவை என்றும் சங்கம் கருத்துத் தெரிவித்தது

இராணுவ இணைப்பு அதிகாரிகள் ஊடாக மட்டுமே ஆதரவுக்கான உதவிகளைப் பெறலாம் என்ற நிர்ந்தனையைத் தளர்த்தி சிவில் நிர்வாக அதிகாரிகளி

(4ஆம் பக்கம் பார்க்க)

வல்வை நகரில் நேற்று

நீண்ட நேரம் ஹெலி தாக்குதல்

பச்சைப் புகையுடன் பீரங்கி முழக்கம்

—உதயன் செய்தியாளர்—

வல்வெட்டித்துறை, செப். 23

இரண்டு ஹெலிகொப்டர் விமானங்கள் வல்வெட்டித்துறை நகரைச் சுற்றி வட்டமிட்டபடி நேற்றுக் காலை 8 30 மணி முதல் தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதல்கள் நண்பகல் வரை நீடித்தன.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வல்வை இராணுவத்தினர் நேற்றுக் காலை முகாமில் கிழக்கு மேற்கு பக்கமாக வெளியேவர முன்றபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் சரமாரியான தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் இராணுவத்தரப்பில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அதன் பின்னர் உயிர் பிழைத்தவர்களின் சடலங்களை எடுப்பதற்கு இர

(4-ஆம் பக்கம் பார்க்க)

தனியார் ஊழியருக்கான சேம லாபநிதி கணக்குப் புத்தகம்

வழங்கும் வைபவம் 29 இல்

யாழ்ப்பாணம், செப். 23

யாழ் மாகாணசபை எல்லைக்கு உட்பட்ட தனியார் ஸ்தாபனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி கணக்குப் புத்தகங்கள் வழங்கும் வைபவம் யாழ் பரிபோவாண் கல்லூரி வில்லியம்ஸ் மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

பிரதம அதிதி யாழ் அரச அதிபர் திரு. வை. எம். பஞ்சலிங்கம் கலந்துகொள்வார்.

ஊழியர் சேமலாபநிதி கணக்குப் புத்தகம் பெறவரும் ஊழியர்கள் தங்களுடைய அவர்களது தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்

சனிக்கிழமை வைபவத்தைத் தொடர்ந்து தொழிற்றிறியாக, ஊழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் தொடர்ந்து ஹர்த்தால் போராட்டம்

ஸ்தம்பித நிலையில் நகரம்

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்புப் பகுதியில் நேற்றும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டன.

கடந்த வியாழன் இடம்பெற்ற வெறியாட்டத்தில் 15 தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து நடந்த சனிக்கிழமை முதல் மட்டக்களப்பில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள் மூடப்பட்டிருந்தன இதனால் ஹர்த்தாலின் முழுமையான தாக்கம் தெரியாதிருந்தது.

வார வேலைநாட்களின் தொடக்கம் நேற்று இதனால் பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் நேற்றுக் திறக்கப்பட்டன

ஆனால் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருவதற்குச் சமூகமளிக்கவில்லை அரச அலுவலகங்களுக்கு குறைவான ஊழியர்களே சமூகமளித்த

(4ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில் 'ஷெல்' தாக்குதல் மூன்று பேர் மரணம்

— முள்ளியவளைச் செய்தியாளர்: ஆ. சபாரத்தினம் —

முள்ளியவளை செப் 23

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை முல்லைத்தீவில் முகாமிலிருந்தும் ஹெலிகொப்டரிலிருந்தும் நடாத்தப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களினால் மூன்று பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

தென்னை மரத்தில் சிவல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் ஷெல் என்று தாக்கிய தால் கீழே விழுந்து மரணமானார்

ஞாயிறு மாலை வற்றாப்பளைப் பக்கமாக வந்த ஹெலிகொப்டர் என்று அ பகுதியில் வந்து கொண்டிருந்த வாகனம் ஒன்றை நோக்கிச் சுட்டது

அதேவேளை முள்ளிய

மோதல்

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்பில் புலி பாய்ந்தால் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றது.

ஆற்றின் ஒருபக்கத்தில் இருந்து போராளி ஞ்கள் மறுபக்கத்தில் ஆயுதப் படையினரும் தாக்குதல்களை நடத்தினர். (உ.எ)

புலிகள் மீட்பு

யாழ்ப்பாணம், செப் 23

வல்வெட்டித்துறையில் முகாமை விட்டு வெளியேறிய இராணுவத்தினரை நோக்கி தாக்குதல் நடத்திய தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களை கூட்டுகள் சிலவும், வயர்ரோல்களும் வெடிமருந்துகளும் தாக்கப்பட்டதாகப் புலிகள் அறிவித்தனர். (உ)

வலை தன்னியூற்றுப் பகுதியாகவும் ஹெலிகொப்டர் ஒன்று வந்தது

இரண்டு ஹெலிகொப்டர்களை நோக்கியும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அதனைஎடுத்து உயரப் பறந்து சென்ற அந்த இரண்டு ஹெலிக்கொப்டர்களிலிருந்தும் ஐந்து ஷெல் ஒன்றுக்கு ஏவப்பட்டன

அவற்றில் மூன்று நீராவிப் பிட்டியிலும் மற்ற இரண்டும் வாமுனைப் பகுதியிலும் வீழ்ந்து வெடித்துச் சிதறின.

முல்லைத்தீவு முகாமிலிருந்தும் ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

முல்லைக்கு அதிகமாக வரும் நீராவிப்பிட்டியில் விழுந்து வெடித்த ஷெல் குண்டிலும் இரண்டு முல்லைக்கு உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.

கடைக்குச் சாமான் வாங்க வந்த சம்சுதீன் (வயது 55), கி. அரசி (வயது 85) ஆகியோரே உயிரிழந்தனர்.

முல்லை என்ற 18 வயது இளைஞர் முன்னே சேதமடைந்த நிலையில் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மரமுனையில் விழுந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை தபால்தலைகள்

குடாநாட்டில் தடைசெய்யப்படும்

ஈ. பி. ஆர். எல். எவ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 23

இலங்கை அரசின் தபால்தலைகள் ஒட்டப்பட்ட கடிதங்கள் யாழ் குடாநாட்டிலுள்ள பரிவர்த்தனையிலிருந்து தடைசெய்யப்படுகிறதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்திருக்கிறது.

ஈழம் தமிழர்தலை பாவனைக்கு வருகுவரை இலங்கை அரசின் தபால்தலைகள் யாழ் குடாநாட்டில் புறக்கணிக்கப்படவிருக்கின்றன.

ஆனால் இப்போது தனியார்களிலும் வேறு இடங்களிலும் 'ஈழம் தபால் தலைகள்' விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே ஒருவாரகாலத்திலுள் இலங்கை அரசின் தபால் தலைகள் யாழ் குடாநாட்டிற்குள் பரிவர்த்தனையில் இருந்து தடை செய்ய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முடிவெடுத்திருக்கிறது.

—இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

முச்சந்தி முனை

சாமான் அரசியல் கைதிகள் போராட்டத்திற்கு ஆதரவாக இன்றும் பல போராட்டங்களாம்! நடக்கட்டும், நடக்கட்டும்!!

தொண்டமானாறு பருத்தித்துறையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 23

பருத்தித்துறை, தொண்டமானாறு இராணுவ முகாம்களிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினரை தாம் தாக்கித் திருப்பி முகாம்களுக்கு அனுப்பியதாக புலிகள் அறிவித்தனர்.

தமது தாக்குதலில் காயமடைந்த இராணுவத்தினரை ஹெலிகொப்டர்கள் ஏற்றிச் சென்றதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

கோட்டையிலிருந்து சூடு;

11 பிள்ளைகளின் தந்தை பலி

மற்றொருவர் காயம்

யாழ்ப்பாணம் செப் 23

கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக பற்றொரு பிள்ளைகளின் தந்தையான ஒருவர் கொல்லப்பட்டார், மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்று பகல் கண்ணிரண்டு மணி அளவில் இச்சம்பவங்கள் நடைபெற்றன.

புகையிலைக்குளத்தைக் அருகில் புகையிலை வெட்டச் சென்ற ஒருவரும் துப்பாக்கிச்சூடுக்கு அருகில் வீடு பிடிக்கச் சென்ற மற்றொருவருமே துப்பாக்கிச் சூடுக்கு இலக்கானார்கள்.

மாடு பிடிக்கச் சென்ற

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷெல் தாக்குதல்கள்:

குருமபசிட்டி சேதங்களுக்கு நஷ்ட ஈடு கோரி மகஜர்

பலாலி, செப் 23

சமீபத்தில் பலாலி விமான நிலையத்தில் இருந்தும், வலிகாமம் மினி இராணுவ முகாமிலிருந்தும் ஏவப்பட்ட ஷெல்களினால் குரும்பசிட்டி மிக மோசமாக பாதிக்கப்பட்டது.

பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இரசாயனமிருந்து நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும், இவ்வாறான மக்கள் விரோத தாக்குதல் களைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டாமெனவும் யாழ் அரசாங்க அதிபருடாக அரசாங்கத்தைக் கோரும் மகஜர் ஒன்று குரும்பசிட்டி மக்கள் பாதுகாப்புக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுத்தலைவர் திரு. க. சோமசுந்தரத்தின் தலைமை ஒப்பந்தத்துடன் அனுப்பிவைக்கப்பட்ட வேண்டுகோளில் பாதிப்புற்றவர்கள் தமது பாதிப்புப் பற்றிய சத்தியக் கடதாசிகள் இணைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் வருமாறு.

திரு. சிவதாசன் ஆசிரியர் வீட்டின் ஓடுகள், தீராந்திகள் உடைந்து தொங்கிகொண்டுள்ளன.

அம்மன் கோவில் முன்னுள்ள திரு இராசரத்தினத்தின் வீடு சேதம் அடைந்துள்ளது.

திரு. வல்லிபுரம் என்பவரது வீட்டின் சமையல் அறைக்கூட்டுக்கு சேதமாகின.

திரு. சோமசுந்தரம் (ஆசிரியர்) அவர்களது வீட்டின் சுவாமி அறை முற்றுமாகச் சேதமடைந்துள்ளதுடன் பக்கத்து அறையும் சேதமாகியது.

திருமதி நகுலநாயகி என்பவரது வீட்டின் பூசையறை முற்றுமாகச் சேதமாகியது (ஷெல் விழுந்தபோது அவரின் தாயார் அன்னப்பிள்ளை அந்த பிராந்தியத்தில் இருந்தார்) அப்போது காயங்களுடன் அவர் உயிர் தப்பினார் இவரது வீட்டுமுன் மண்டபமும் சேதமாகியது.

விறைசர் சதாசிவம் என்றழைக்கப்படுபவரின் வீட்டில் விழுந்த ஷெல் மேல்மாடிப் பிளாற்றைச் சேதமாக்கியது.

திரு. கதிரவேலு (ஆசிரியர்) அவர்களது கண்ணாடி யன்னல், சீறி என்பவற்றை ஷெல்குண்டுகள் உடைத்துள்ளன

திரு. தி. சண்முகலிங்கம் திரு. சிவராசா, திரு. பாலசுப்பிரமணியம் என்பவர்களின் வீடுகளுக்கும் சேதமேற்பட்டது.

பலனத்தம்மை வீதியில் விழுந்த 'ஷெல்' நவில் மணியம் (தங்கம்மா வீடு) வீட்டிலும் அரியரத்தினம் ஆசிரியர் வீட்டிலும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது.

திரு. கதிரவேலின் நீர்த்தொட்டியும், கிணறும் உடைந்து பாதிப்படைந்தன.

திருமதி. மனோரஞ்சிதம் வீட்டில் 6 முறை 'ஷெல்' விழுந்து வீட்டை மோசமாகச் சேதப்படுத்தியது

திரு. வைரமுத்து திரு. நா. செல்வராசா என்பவர்களின் கால் நடைகளும் கொல்லப்பட்டுள்ளன

அரசடியில் உள்ள திரு. நல்லையாவின் கடை, திரு. சண்முகநாதனின் வீடு, திரு. ஞ்சிதபாதக் குருக்கள், திரு மாணிக்க வாசகக் குருக்களின் வீட்டின் பின்புறம், வாளி கோவிலின் பின்புறம், பிள்ளையார் கோவில் அம்மன்கோவில் என்பனவும் சேதமடைந்துள்ளன.

திருமதி மகேஸ்வரி என்பவர் காலின் செயற்பாட்டை இழந்துள்ளார்.

இவ்வாறு அவ் அறிக்கையில் விவரங்கள் தெரியப்படுத்தியுள்ளன.

பதினாறு குழிகளுக்குள் மக்கள் பதுங்கியதால் பல உயிர் இழப்புக்கள் ஏற்படாது தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-119)

வட பகுதியில் மக்கள் வங்கிக்கு பெரும் நஷ்டம்

யாழ்ப்பாணம், செப் 23

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக வடபகுதியில் நடந்தவரும் அரசம் பாதிக்கப்பட்ட தாக்குதல் காரணமாக மக்கள் வங்கிக் கிளைகள் பல மிகுந்த நிலையை அடைந்துள்ளன.

இதன் காரணமாக பல லட்சக்கணக்கான ரூபா வங்கிக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாவது:—

பல இடங்களில் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் வங்கிகள் சீரான சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் மக்கள் வங்கி உயர் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

முன்னர் கொழும்புக்கு அடுத்தபடியாக வடபகுதி மக்கள் வங்கிகளே அரசுக்கு அதிக இலாபத்தை ஈட்டிக்கொடுத்து வந்தன.

ஆனால் தற்போது வடபகுதிக் கிளைகள் நஷ்டத்தில் இயங்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

வடக்கு வெகுஜனத்துறை, கிளிநொச்சி, ஊர்காவற்துறை, மன்னார் ஆகிய இடங்களில் உள்ள வங்கிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

தொடர்ந்தும் வடபகுதியில் அசம்பாவிதங்கள் தொடருமானால் மக்கள் வங்கிக் கிளைகள் முற்றாக மூடப்படும் நிலை ஏற்படலாம் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

மக்கள் வங்கி பொதுச் சபை

யாழ் மாவட்ட மக்கள் வங்கி பொதுச் சபைக்கான பிரதிநிதிகள் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்

திரு சி. சிவமகாராசா தலைவர் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

திரு எஸ் மணிவண்ணன், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

திரு. எக். செல்லத்துரை செயலாளர் யாழ் வைத்தியசாலை சேவை சிக்கன செயிப்புக் கடன் நிவித்திச் சங்கம்.

திரு. க. சி சிவகுரு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை.

திரு எஸ் திருநாவுக்கரசு இணுவில் ஐக்கிய நாணயச் சங்கம். (இ-10)

ஆங்கில தின போட்டி முடிவுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான யிலான ஆங்கில தினப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன

இப்போட்டி மூன்று பாடசாலைப் பிரிவுகளில் நடைபெற்றது.

போட்டி முடிவுகள் தற்போது உதிரிகளாக பூர்வாங்க வெளியிடப் பட்டிருக்கின்றன

இம் முடிவுகள் தினமும் தொடர்ந்து உதயனில் வெளிவரும்.

போட்டி முடிவுகள் மூன்றாம் நாளாக இன்று பிரசுரமாகின்றன:-

பிரிவு 1 ஆண்டு 6

சொக்வதெழுதல்-

1. வி. தனுஜா (உடுவில் மகளிர்) 2.ஜே எஸ் குணநாயகம் (செண்ட் ஜோன்ஸ்), 3. ஏ. அல்விஷி (சாவகச்சேரி இந்து)

எழுதுதல்-

1. எக். மோனவர தன் (யாழ்ப்பாணக் கல்லூரி), 2. எக். சேரன் (அம்னோஸ்), 3 எஸ் அனுஷ்யா (ஞானசாரியார்)

உரத்து வாசித்தல்-

1. எக். கவிதா (யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆர். டிலினி (உடுவில் மகளிர் , 3 ஜி சுபாஷினி (திருக்குடும்ப கன்னியர்மடம்).

பாஷக்-

1. டி. ஆர். தேவ் ஆனந்தன் (செண்ட் ஜோன்ஸ்), 2 வி. நிர்மலநாதன் (உடுவில் மகளிர்) 3. தி தனுஜா (உடுவில் மகளிர்)

அபிநயப்பாடல்-

1. உடுவில் மகளிர் 2. யாழ் பாணக்கல்லூரி. 3. திருக்குடும்ப கன்னியர் மடம்

மாத்திர நாடகம்-

1 உடுவில் மகளிர், 2.திருக்குடும்ப கன்னியர்மடம், 3 உடுப்பிட்டி மகளிர்

குழுப்பாட்டு-

1. உடுவில்மகளிர், 2. கண்டி வீதி மகளிர், 3; யாழ்ப்பாணக்கல்லூரி.

(வளரும்)

பொருட் காட்சி

அச்சுவேலி, செப்.23

கோப்பாய் கல்வி வலயட்டார பாடசாலைகளுக்கு மத்தியில் ஏற்பாடாகியுள்ள "கல்வி பொருட் காட்சி" இரண்டு தினங்கள் நடைபெறும்

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் இம் மாதம் 30 ஆம் திகதியும் அக்டோபர் 1 ஆம் திகதியும் இந்தப் பொருட் காட்சிநடைபெறும்.

கோப்பாய் கல்வி வலயட்டார பாடசாலைகள் மத்தியில் நடைபெறும் பொருட்காட்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்துவதற்கு வட்டாரக் கல்வி அதிகாரி தலைமையில் குழு ஒன்று தெரிவு செய்யப்படுகிறது. (உ-11)

எங்கள் சேவை

விற்பனைக்கு

யாழ் ஸ்ரான்லி கல்லூரி கண்டியில் உள்ள கனகரத்தினம் ரோட், சாஸ்திரியார் லேனில் 4 பரப்புக் காணி பனைகளுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு ஆ. இரவீந்திரன், 30/5, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

ஒருவர் உழைப்பில் பலர் வாழும் மனப்பாங்கு மாற வேண்டும்

பண்டத்தரிப்பு, செப் 23

ஒருவர் உழைப்பில் பலர் வாழும் மனப்பாங்கு மாறவேண்டும், குடும்பத்தில் அனைவரும் உழைக்க வேண்டும்.

பண்டத்தரிப்பு சிவசாய விநாயகர் அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்பு வாழ்குவானி நிலைய சான்றிதழ் வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

நிலையத்தலைவி சகோதரி சரோதரி யூலானி தலைமையில் ஒருவருடப்பயிற்சி முடித்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

திரு. பாலகிருஷ்ணன் தொடர்ந்து உரையாற்றுகையில், சென்னை அலுவலக ஊழியராக, ஆலோசனையாளராக, தாதிகளாக வேலை பார்த்து பணம் சம்பாதிக்க வேண்டுமென்றில்லை

ஒப்வு நேரத்தில் வீட்டிலிருந்தே இங்கு பயிற்சி பெறும் தையல், அலங்காரம், விவசாயம், கைப்பணி, பூ தயாரிப்பு, பாவை தயாரிப்பு, தும்பு தொழில், பின்னல் வேலை, கோழிவளர்ப்பு ஆகியவற்றைச் செய்யலாம் என்றார்.

பிரதம விருந்தினர் வங்குத்தந்தை வணக்கத்திற்குரிய ஜெயகுமார் அடிகள் பயிற்சிக் காலத்தில் தயாரித்த பொருள்களின் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

யாழ்மாவட்ட கன்னியர்மட தலைமைத்தாய் தான்றிதழ்களை வழங்கினார்.

ஜெபித்தா கல்லூரி அதிபர் கலைக்குரிய சகோதரி சறினா முன்னாள் வட்டுக்கோட்டை லயன்ஸ் டபிள்யூ. என். தேவதாஸ்சம் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். (இ-120)

அஞ்சல் அலுவலகம் இடம் மாற்றப்பட்டதற்கு அரச அதிபருக்குப் பாராட்டு

பண்டத்தரிப்பு, செப் 23

யாழ் அஞ்சல் அலுவலகத்துக்கு புதிய இடத்தை இரண்டாம் குறுக்குத் தெருவில் ஒதுக்கித் தந்தது மூலம் அரச அதிபர் பெரும் பணி செய்துள்ளார்

அஞ்சல் தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் 29 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய கிளைத்தலைவர் திரு. அ. குணபரசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கட்டடம் இடம் மாற்றம் செய்யப்படாவிட்டால் மக்களுக்கு இன்று கிடைக்கும் தபாற் சேவைதானும் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்றார்.

இவ்வருடாந்த கூட்டத்திற்கு யாழ் பிரதம அஞ்சல் அதிபர் திரு எஸ். பி. ஞானப்பிரகாசம், முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியக்ஷகர் திரு எஸ். எம். சேதுகாவலர் தாய்ச் சங்கப் பிரதிநிதி திரு. எம். குணநேசம் (உதவி அத்தியட்சகர்) ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர். (இ-120)

திருமலையில் ஆசிரியர் உட்பட இருவர் கைது

திருகோணமலை, செப் 23

திருகோணமலை நகரில் ஆசிரியர் நா. இராஜநாதன், திரு பன்னீர்செல்வம் ஆகியோர் ஞாயிறு நண்பகல் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்பாறிய அரச ஊழியர் திரு டி. என். நல்லவேலுவின் மருமகன் மார் இவர்கள்

பொலீஸ் நிலையத்தில் விசாரணைக்காக கைது தடுத்துவைக்கப்பட்டனர் (இ-எ-150)

மேலும் சட்டங்கள்

கேப்டவுன், செப் 22

தென் ஆபிரிக்காவில் தொழிற் சங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படவிருக்கின்றன.

நிலையற்ற தொழிற் சங்க நடவடிக்கைகளை நடைசெய்வதற்கு இடமளிக்கும் வகையில் இப் புதிய சட்டங்கள் அமையும் என்றும் தென் ஆபிரிக்க அரசு அறிவித்தது (உ-ஒ)

செய்திக்கொத்து

கோப்பாய்க்கு இலவச பாடநூல்

ஊர்காவற்துறை, செப்.23

கோப்பாய் கல்வி வட்டாரத்துக்கான பத்தாயிரம் இலவச பாடநூல்கள் அண்மையில் கிடைத்துள்ளன என்று வட்டாரக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-118)

மண் அள்ளும் தீய சக்திகள்

ஊர்காவற்துறை, செப் 23

கால்நடைகள் மேய்ந்து திரியும் மேட்டு நிலங்களிலிருந்து தேக்மண்ணை வெட்டி எடுத்து தங்கள் தோட்டங்களுக்குப் போடும் தீயசக்திகளினால் சுருவில் கிராமத்தில் உள்ள கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (இ16)

மருந்து இல்லை

முல்லியவளை, செப்.23

முல்லியவளை, முல்லைத்தீவு வைத்தியசாலையில் ஆஸ்துமா நோய்களுக்குரிய மருந்து தட்டுப்பாடாக இருப்பதாக தெரியவருகிறது. (இ-93)

சாவகச்சேரியை நாடும் பூநகரி மக்கள்

பூநகரி, செப் 23

பூநகரிப் பகுதியிலுள்ள மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் முக்கிய இடமாக சாவகச்சேரியை தற்போது பயன்படுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி அரசம்பாலிதங்கள் யாழ் பாணம் கோட்டையிலிருந்து நடத்தப்படும் தாக்குதல்களை ஆயுதமாகக் கருதியே தமது சந்தைப்படுத்தல் மற்றும் கொள்வனவு வேலைகளையும் ஏனையவற்றையும் சாவகச்சேரியில் இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர் (இ144)

இரணைமடுச் சந்தியில்

கிளிநொச்சி, செப் 23

அக்கராயன், வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம், இரணைமடு, ஆனைவிழுந்தான், ஆரோக்கியபுரம், கோணாவில், பாரதிபுரம் ஆகிய இடங்களின் மக்கள் நலன் கருதி கண்டாவளையில் இயலிதம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையாரால் இந்த நிலையம் கிளிநொச்சி கண்டிவீதி இரணைமடுச் சந்தியிலுள்ள சேவைக் கிளைப் பயிற்சி நிலையத்தைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கிளிநொச்சி அரசகரும மொழி அதிபர் திரு. ஜெ. செந்தில் நாதன் தலைமைச் சந்தித்த கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தூதுக் குழுவிடம் இதனைத் தெரிவித்தார். (இ-76)

வாசகர் வட்ட முதலாவது ஆண்டு விழா

வட்டுக்கோட்டை, செப் 23

வட்டுக்கோட்டை கிழக்கு சிந்தனைக்கேணி வாசகர் வட்டத்தினரின் முதலாவது ஆண்டு நிறைவு விழா பிளவத்தை வீரபத்திரர் கோவில் முன்றலில் வாசகர் வட்ட உப செயலாளர் திரு. சி. சிவானந்தன் தலைமையில் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

காரைநகர் கலாநிதி ஆ. திலகராசா மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு, திருமதி க. ம. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகவும் நவாலி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சி ஜே. இளைதம்பி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

பிளவத்தை அ. மி. த. க பாடசாலை ஆசிரியர் திரு சீ. தணிகாசலம் மங்கள விளக்கேற்றி வைப்பார். திரு ந. நடராசா கொடியேற்றி வைப்பார்.

விளையாட்டுப் போட்டிகளான பரிசில்களை மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி மகேஸ்வரி செல்வரத்தினம் வழங்குவார்.

பிரதேச நொதாரிஸ் திரு. கி. வரைமுத்து, திரு. ச. குலசூரியன், திரு. கி. தாமோதரம் பிள்ளை, மு. செ விக்கினேஸ்வரன், த. அகிலன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள் (இ161)

ஜெயந்தி நகரில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.23

கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட கல்வி நிலை பற்றி ஆராயும் கூட்டம் ஒன்று இன்று செவ்வாய் மாலை ஜெயந்திநகர் சமூக மண்டபத்தில் நடைபெறும். (இ-எ)

வங்கி முகாமையாளர் காலஞ்சென்ற
திரு. சூரியகுமாரன்
அவர்களின்
31வது நாள் நினைவஞ்சலி

தங்களின் சிறந்த சேவையை நினைவு கூரும்

Proprietor. Staff and Workers of XAVY GLASS METAL WORKS, Neervely.

Directors, Staff and Workers of KNITWEAR LTD, Kopay.

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்வதற்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

- கனடா
- ஜேர்மன்
- பிரான்ஸ்
- டென்மார்க்
- ஹொலண்ட்
- பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா, பொன்ட், BOND ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ, (மகளிர் கல்லூரிக்கருகாமையில்) மானிப்பாய்

சமூத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்- ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அன்னாரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளார்

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருட கால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரோ கொம்யூனிக்கேசன்

கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

நீதி பேரதனைகளை, வரலாற்றுச் சம்பவங்களைக் கேடு ஆன்மாவைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

- காஞ்சி முனிவர்

உதயன்

இலங்கை - விநியோகம் - நடு நிலைமை

இல. 15 2வது தமுக்கை தொலைபேசி 24805
கின்சாரி நிலைய வீதி. 22073
யாழ்ப்பாணம், 23-9-1986 தபெ இல 23

கைதிகளுக்கு ஆதரவாக ஒன்றுபட்ட போராட்டம்

பூஸா இராணுவத் தடுப்பு முகாமிலும், வெலிக்கடைச் சிறையிலும் தமிழ் பேசும் அரசியல் கைதிகள் நடத்தி வரும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது.

அவர்களுக்கு நீதி வழங்கி உண்ணாவிரதத்தைத் கைவிடச் செய்யும் உண்மையான எண்ணம் எதுவும் அரசுக்கு இருப்பதாக இல்லை.

அதனால் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை நாளாந்தம் உயர்ந்து வருகிறது.

நமது கைதிகளின் வதை முகாம்களுக்கு எந்த விதத்திலும் குறைந்ததோ வேறுபட்டதோ அல்ல பூஸா தடுப்பு முகாம். அங்கு நடக்கும் கர்ண கொடூரமான சித்தி வதைகளுக்கு எத்தியிலும் தமது சாத்விகப் போரை ஆரம்பித்த தமிழ் அரசியல் கைதிகளின் மன உறுதி மலைகளாக இருப்பதையே பார்க்கிறோம்.

வெளியில் இருந்து போராடுவதை விட சிறையில் இருந்து போராடுவது பெரும் ஆபத்தானது. ஏற்கனவே எழுத்தில் வடிக்க முடியாத கொடூரமான சித்திரவதைகளை அங்கு அனுபவித்த போதிலும் வருவது வரட்டும் என்ற மனத்துணிவுடன், மரணத்தை எதிர் கொள்ளும் திட சிந்தையுடன் அவர்கள் போராடத்தில் குதித்துள்ளார்கள். பயங்கரமான பல படுவதைகளுக்கு மத்தியிலும், உரிமை கோரும் போருக்கு நீதிகோரும் போருக்குத் துணிந்தமை அவர்களது நித்தியை எடுத்துரைக்கிறது. அதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம் வீரத் தமிழனின் தீர சிந்தையை கைதானாக இருந்த போதிலும் அந்த இளந்தமிழ் வேங்கைகள் கிழந்துவிடவில்லை என்பது கண்டு பூரிப்படைகிறோம்.

ஆனால் பாராட்டுவதோடு பூரிப்படைவதோடும் வெளியில் வாழும் தமிழ் மக்கள் நின்றுவிடக் கூடாது. அரசியல் கைதிகளது நீதிக் போராட்டம் உரிமைப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு இயன்றவரை உதவ வேண்டும்.

சிறைக் கூடத்திற்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பதல்ல. ஒவ்வொரு தமிழக் குடும்பத்திலும் அரச பயங்கரவாதம் ஆட்கொண்டிருந்தது ஒருவரையாவது பலி கொண்ட நிலையில் வெளியில் உள்ள தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்பது உண்மை. அவர்களும் நித்தம் நித்தம், கணத்துக்குக் கணம், மான பயத்துடன் செத்துக் கொண்டுதான் வாழ்கிறார்கள்.

ஆயினும் சிறைக்கூடங்களில் — வதை முகாம்களில் மனித அடிப்படைத் தேவைகளையே பெறமுடியாத நரக வாழ்க்கை வாழும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலை மேலும் அவலநிலையானது— அவலமானது.

விருப்பமே விடக் கேவலமான வாழ்க்கையை தென்னிலங்கை முகாம்களில் வாழ வேண்டிய துரதிஷ்டத்துக்கு எமது உடன்பிறப்புகள், பிள்ளைகள் ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

அதனால் தான் அவர்கள் மரணமேகினும் தமது உரிமையைப் பெற வேண்டும் என விரும்பி போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

அவர்கள் வாடுகின்றவதை முகாம்களிலிருந்து பலமைல் தொலைவில் நீங்கள் இருந்தாலும், அவர்களைச் சாகவிடக்கூடாது எதனைத் தடுக்க இயன்றவரை போராட வேண்டும்.

இலங்கையில் தமிழனின் வாழ்க்கையே போராட்டமயமாகி விட்டது ஆயின் எமது பிள்ளைகளுக்காகவும் உடன் பிறப்புகளுக்காகவும் போராடியே ஆகவேண்டும். அல்லவா?

தமது ஆறு அம்ச நீதிக் கோரிக்கைகளுக்கு ஆதரவாக— உரிமைப்போருக்கு ஆதரவாக வெளியில் உள்ள தமிழர்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று அரசியல் கைதிகள் விரும்புகிறார்கள்.

சத்தியாக்கிரகம், ஹர்த்தால் ஆகிய சாத்வீகப் போராட்டங்களை ஒழுங்குபடுத்தி தங்களுக்கு, தங்கள் போராட்டத்துக்கு ஆதரவு நல்குமாறு அவர்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை நிறைவேற்றும் கடமை எல்லாத் தமிழ் மக்களுக்கும் உண்டு பின்வரும் சாத்வீகப் போராட்டங்களை நடத்தலாம்

* நீதிமன்றங்கள் உட்பட சகல அரச அலுவலகங்களையும் பகிஷ்கரித்தல்.
* பெரிய அளவிலான உண்ணாவிரதம் போராட்டத்தை நடத்தி தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டை அரசாங்கத்துக்கும் உலகத்துக்கும் எடுத்துக் காட்டுதல்
* அரசியல் கைதிகளுக்கு மனித உரிமைகள், தேவைகள், நீதி ஆகியன மறுக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து ஊர்வலங்களை நடத்துதல்

மேற்கண்ட போராட்டங்களை, அரசியல் கைதிகள் நீதிமன்றப் பகிஷ்கரிப்பு நடத்தும் ஒரு வார காலத்துக்கு (இன்று தொடக்கம் 29 ஆம் திகதி வரை) மேற்கொள்வது நல்லது.

இவ்விஷயத்தில் அலைப்பு பேதம், இயக்க பேதம், ஊர்பேதம், கட்சிபேதம், சங்க பேதம் எதுவும் இன்றி எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதே மிகப்பிரதானம் அப்படிச் செய்வதன் மூலமே அரசியல் கைதிகள் விஷயத்தில் வெளியில் உள்ளவர்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும். உலக அபிப்பிராயத்தை உருவாக்க முடியும்

அரசியல் கைதிகளுக்கு ஆதரவான போராட்டத்தில் தன்மானம் உள்ள ஒவ்வொரு தமிழனும் பங்குபற்ற வேண்டும்.

இன்றைக்கு அவர்களுக்கு நடப்பது நாளைக்கு உங்களுக்கு நடக்கலாம். அல்லது உங்கள் பிள்ளைகளுக்கு நடக்கலாம் சற்றே சிந்தியுங்கள்!

ஐரோப்பிய பாதுகாப்பு மாநாட்டில் உடன்பாடு

யுத்த பீதி தணிய வழி பிறந்தது

வியன்னா, செப் 22
சுவிட்சலாந்தில் நடைபெற்று வரும் ஐரோப்பிய பாதுகாப்பு வலைக் குறைப்பு மாநாட்டில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருக்கிறது.

முன்று வருட காலமாக இழுபறி நிலையில் இருந்து வந்த கிழக்கு, மேற்கு பாதுகாப்பு மாநாட்டில் அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல நாடுகள் உடன்பாடு ஒன்றை எட்டியிருப்பது உலகில் யுத்த நெருக்டியை பெரிதும் தவிர்க்கும் என எதிர்பீடு செய்யப்பட்டிருக்கிறது

புதிய உடன்பாட்டின்படி அமெரிக்கா, ரஷ்யா முதலிய வல்லரசுகளும், கனடா மற்றும் கிழக்கு, மேற்கு நாடுகளும் தமது இராணுவப் பயிற்சிகள் குறித்து முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்.

உடன்பாட்டின் விடயங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை

எனினும் 14 ஆயிரம் தரு புகளுக்கு 200 டாங்கிகளும் ஒரு இடத்திலிருந்தோ அல்லது மறுபடியுமாகவோ அது பற்றி ஒரு வருடத்திற்கு முன்னதாகவே அறிவிக்கப்படவேண்டும் என்று அறிக்கை ஒன்று தெரிவித்தது

17 ஆயிரத்திற்கும் அதிகமானோர் சம்பந்தப்பட்ட எந்த ஒரு பயிற்சிகளும் வெளியிலிருந்து பார்வையாளர்களின் அனுமதிக்கப்படவேண்டும்.

மேலும் எந்தொரு நாடும் மோசடி செய்வதாக இன்னொரு நாடு சந்தேகப்படுமானால் அதன் இராணுவ நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் உரிமையுண்டு.

இந்த உடன்பாட்டினால் விபத்துக்களினால் அல்லது அசிரத்தையினால் ஐரோப்பாவில் போர் ஒன்று உருவாவதைத் தடுத்துவிடலாம் என அமெரிக்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஒ)

ஆர்ப்பாட்டம்

அயஸ்ரடாம், செப் 22
வட அந்திலாந்திக் உடன்படிக்கை ஸ்தாபனங்களின் பயிற்சிகளில் பங்கேற்க நேட்டோவின் 21 கப்பல்கள் வடக்கு கலுக்கு போய்ச் சேர்ந்துள்ளன

இதனை எதிர்த்து ஒல்லாந்திலே தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பிரிட்டன், பிரான்ஸ் அமெரிக்க கப்பல்கள் அணு ஆயுதங்களை ஏற்றிச் செல்வதாக அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (உ-ஒ)

வானி உலகில்

வன்செயல்கள் மேற்கு வங்கத்தில் மீண்டும் தலைதூக்கியுள்ளன

கல்கத்தா, செப் 22
மேற்கு வங்க மாநிலத்தில் கூர்க்கா தீவிரவாதிகள் வன்செயல்களை மீண்டும் ஆரம்பித்துள்ளார்கள்.

கூர்க்கா தேசிய முன்னணியைச் சேர்ந்த தீவிரவாதிகள் டார்ஜிலிங்கில் 56 வீடுகளைத் தீக்கிரை யாக்கினர்.

சில நாட்கள் நிலவிய

அரசியலில் ஈடுபடத்தடை

லாகோஸ், செப் 23
நைஜீரியாவின் முன்னாள் ஜனாதிபதி சேகுவாரியும் உதவி ஜனாதிபதி ஆலெக்ஸ்நெகூ 5 யும் தமது எஞ்சி உள்ள ஆயுட்காலத்தில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடவோ அல்லது பொதுஸ்தாபனம் ஒன்றில் பதவி வகிக்கவோ முடியாதவாறு அரசால் தடுக்கப் பட்டுள்ளனர்

அவர்களது நான்கு ஆண்டுக்கால அரசாங்கம் 1984 இல் ஜெனரல் முகமட் புகாரி தலைமையில் செயல்பட்ட இராணுவ குழுவால் பதவி நீக்கம் செய்யப்பட்டது (உ-ஒ)

அமைதியின் பின்னர் தீவைப்புச் சம்பவங்களிலும் கொடூரச்சியான ஒன்று வெடிப்புக்களும் மீண்டும் மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் மாகுதியை தாக்க ஆரம்பித்துள்ளன

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மேலதிக பொலீஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ஒ)

நிவாரணம்

வாசிங்டன், செப்.22
சூடானில் தென்பகுதியில் வறட்சியாக வாடு வோர்க்கு நிவாரணமளிக்க 4 லட்சத்து 50 ஆயிரம் டாலர் பெறுமதியான உணவுப் பொருள்களை அமெரிக்காவும் கனடாவும் உடனடியாக அனுப்பி வைக்கின்றன. (உ-ஒ)

சோவியத் பிரதமர் இந்தியா வந்தார்

புதுடில்லி, செப். 22
சோவியத் நாட்டு பிரதமர் முஸ்கொட்டாவே 12 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா வந்துள்ளார்.

விவசாய அபிவிருத்தி, சிறு கைத்தொழில், முன்னேற்றம் ஆகியன பற்றி இவர் அரசுடன் கலந்துரையாடுவார். (ஒ)

கூர்கா இயக்கத்தை ராஜீவ் ஊக்குவிக்கிறாராம்

புதுடில்லி செப். 23
கூர்கா தேசிய விடுதலை இயக்கத்தை பிரதமர் ராஜீவ் காந்தி ஊக்குவிக்கின்றார் என மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு கூறினார்.

இதனை மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

ஜோதிபாசு மக்களைத் தவறான பாதையில் வழிநடத்துவதாகவே கூறுகின்றார் உண்மையைத் திரித்துக் கூறவும் முயற்சிக்கின்றார் கூர்கா தேசிய விடுதலை இயக்கம் தேசவிரோதமானது என்பதையும் பிரிவினைவாத இயக்கமானது என்பதையும் புலப்படுத்தக் கூடிய தாஸ்தாவேஜுகள் எதுவும் தமது கவனத்துக்கு கொண்டுவரப் படுமேயானால் அது தொடர்பாக உடனே நடவடிக்கை எடுக்கப்படும் - இப்படிப் பிரதமர் தெளிவுபடக் கூறியிருப்பதாக உள்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-ஒ)

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை:

200 விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டன

சுன்னாகம் செப் 23
சுன்னாகம் பிரதேசங்களிலிருந்து வேண்டுகோளுக்கிணங்க பரீட்சை ஆணையாளர் ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கான விண்ணப்பங்களை கடந்த 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததைத் தொடர்ந்து 200 க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை சுன்னாகம் பிரதேசக் குழுவிடம் சமர்ப்பித்தனர்

விண்ணப்பங்கள் யாவும் 16ஆம் திகதி பதிவுத்தபால் மூலம் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று பிரதேசக் குழுத் தலைவரும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமான திரு நி. காரணிக்கவாசகர் உதயனிடம் தெரிவித்தார். மாணவர்களுக்கு உதவியதற்காக பொதுமக்களும் சமூகசேவை ஸ்தாபனங்களும் சுன்னாகம் பிரதேசக் குழுவினரை பாராட்டுகின்றனர். (இ-27)

அங்கவீனர்களுக்கு முச்சக்கர வண்டிகள் மன்னார் லயன்ஸ் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப் 23
கால்களை இழந்த இரண்டு அங்கவீனர்களுக்கு இன்று முச்சக்கர வண்டிகளை மன்னார் லயன்ஸ் சமூகம் அன்பளிப்புச் செய்துள்ளது

வலய லயன்ஸ் தலைவர் லயன் ஜி. யு. கேதீஸ்வரனின் தலைமையில் மன்னாரில் நடைபெறும் போது அங்கவீனர்களுக்கு சக்கர வண்டிகள் கையளிக்கப்பட்டன.

இது சம்பந்தமான நிகழ்ச்சிக்கு மன்னார் லயன்ஸ் சமூகத்தலைவர் டாக்டர் ஜி. கதிர்காமநாதன் தலைமை வகித்தார்.

மன்னார் லயன்ஸ் சமூகத்தின் சேவைகளை வலயத் தலைவர் லயன் யு. கேதீஸ்வரன் பாராட்டிப் பேசினார்.

அன்றைய தினம் "மன்னார் லயன்ஸ் சமூகம் திறமையான சாரதி விருது வரவேற்கிறது" என்ற வரவேற்பு அறிவித்தல் ஒன்று மன்னார் நுழைவாயிலில் நடப்பட்டது. (இ-எ)

சான்றோர் நிறைந்த சமுதாயம் உருவாக வேண்டும் மணி விழாவில் உரை

வட்டுக்கோட்டை, செப். 23
தமிழ் மக்கள் தமிழ் மக்களாக வாழவேண்டுமானால் சான்றோர் நிறைந்த சமுதாயம் உருவாக வேண்டும். சான்றோரை உருவாக்கும் பண்பாட்டுக் கல்வி அமைக்கப்படவேண்டும். சான்றோர் நிறைந்த சமுதாயம் சிறந்த சமுதாயமாக மிளிரும் என்பது நம்பிக்கை.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற கணிதிமாலின் இரண்டாம் நாள் நிழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு சு சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. சு. சிவஞானசீர் தலைமையில் மணிவிழா நடைபெற்றது.

செல்வி இ. கண்மணி யம்மாளின் பண்ணிசை நிழ்ச்சியும் நடைபெற்றது

இளைப்பாறிய ஆசிரியர் திரு. சி. மருதலிங்கம் உரையேற்புரை நிழ்த்தினார்

தமிழ்த் தென்றல் புலவர் சுழற்றுச் சி. [illegible] தன் 'சமயநெறி தமிழ்' என்னும் பெருமை பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் இவியருவிழி செய்வோம்' எனும் தலைப்பில் கவியரங்கு நடைபெற்றது.

பண்டிதர் ச. வே. கஞ்சாட்டரம், திரு. இ. சிவானந்தன், திரு. வ. நி. இளங்கோவன், திரு. ஜெ. சி. ஜெயலிங்கன், கவிஞர் வே. குமாரசாமி ஆகியோர் இக்கவியரங்கில் கலந்து கொண்டனர்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. வ. தங்கசுவாமி நன்றி நவின்றார்.

கலை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் இவ்விழாவில் இடம்பெற்றன (இ-161)

பிரிடனிலிருந்து வெளியேற்றம்

லண்டன் செப்-22
கஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் பிர்மிங்டனிலிருந்து வெளியேற்றப்படவிருக்கின்றார்.

வெறுகுண்டுகளை தம்வசம் வைத்திருந்தால் என்ற குற்றச்சாட்டின் பேரில் [illegible] இவர் சைத் செய்யப்பட்டிருந்தார். (உ-ஒ)

திருக்குறள் ஐக்கிய நாணய சங்க உறுப்பினரும் கடன் வசதி பெறுவர்

யாழ்ப்பாணம், செப் 23
ஐக்கிய நாணய சங்க சமாஜம் வழங்கும் விசேட கடன்களும் கடமுறிகள் கடன்களும் திருக்குறள் ஐக்கிய நாணய சங்க உறுப்பினர்களுக்கும் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.

இப்படி ஐக்கிய நாணய சங்கங்கள் சமாஜ செயற்குழு உறுப்பினர் திரு. இராஜலோகநாதன் தெரிவித்தார்.

திருக்குறள் ஐக்கிய நாணய சங்கத்தின் [illegible] வருடாந்த பொதுக் கூட்டம் [illegible] மாடத்தில் கடந்த வை. [illegible] ஞாயிறு பிற்பகலில் கடந்த புதன்கிழமை நடந்தது.

அக்கூட்டத்தில் பேசுகையில் லிய திரு லோகநாதன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திருக்குறள் ஐக்கிய நாணய சங்கம், ஐக்கிய நாணய சங்க சமாஜத்தில் 133 ஆவது உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் திரு லோகநாதன் வெளியிட்டார்

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் திரு. ஏ. எஸ். யோகநாதன் (பொறியியலாளர்) தலைமை வகித்தார்

கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ் சே சண்முகராஜா தலைமையில் [illegible] மாவட்டத்தில் [illegible]

A/L CHEMISTRY
D SIVASOTHY B.Sc.
87–ORGANIC GHEMISTRY
88–GENERAL CHEMISTRY
PHYSICS – N. Pathmanathan M Sc.
87 – MECHANICS, 88–LIGHT
ஆரம்பமாகின்றன
Northern Ins i ute
408. CHUNDIKULI – JAFFNA.

உதயன்

23-09-1986 செவ்வாய்க்கிழமை

A/L தூய கணிதம்—A.B.A: ஜெயம் B.Sc
87 - வரிசை மாற்றமும் சேர்மானமும்
88 - அட்சர கணிதம்
பிரயோக கணிதம்
87 - எறியம்
88 - வேக நேர வளையி
ஆரம்பமாகின்றன
நொதேண் இன்ஸ்ரிரியூட்
408, சுண்டிக்குளி—யாழ்ப்பாணம்.

விக்கிரம்

தம்பி முரளி, கொஞ்சம் நில். வேகமாய்ப் போகாய் வாசகர் திரும்பக் கிடைக்கிறது போல்

காசம் தலையில் கொத்தினதும் தெரியாமல் எல்லா ஒடுறாய் அப்பா! காசம் கொத்தினால் சனி தோஷம் என்று சொல்லுறனா.

ஓடிவாடா எண் எண்ணெய்யேப்பா! எனக்கு உதுவிலை அவ்வளவு விசுவாசம் குறைவு. சனிக்கிழமை தவிர்க்க மற்ற நாளில் எல்லாவிலை எரிக்கலாமோ என்கிறது நிச்சயமில்லை. ஆ ரும் நல்லா விஷயம் தெரிஞ்சவையிடை கேட்டுச் செய் தம்பி!

இப்ப சாத்திரங்களும் காலத்துக்கு ஏத்த மாதிரிப் புதுசு புதுசா மாறிக் கொண்டிருக்கு அது மாறயில்லை ஆக்கள் மாத்துகினம்.

இந்தமுறை புதுசா ஒரு கதை வந்திருக்கு கேள் விப்பட்டியே .?

இப்ப புரட்டாசிமாசம் நடக்குது புரட்டாசியில் சனிதோஷம் நீங்க எல்லாவிலை எரிகிறது சம்பிரதாயம் சிலபேர் முதல் சனியன்று எரிப்பினம் சிலபேர் கடைசிச்சனியன்று எரிப்பினம். சிலபேர் எல்லாச் சனிக்கிழமையிலையும் எரிப்பினம்.

இந்தமுறை நவராத்திரி பூசை புரட்டாசி மாசத்து முன்றாவது சனிக்கிழமை தொடங்குது அதால் எல்லாம் எண்ணையும் எரிக்கிற தெண்டால் முதல் இண்டு சனிக்கிழமையன்று தான் எரிக்கலாம், நவராத்திரி தொடங்கி அது முடியும்வரை எரிக்கக் கூடாது என்டு ஒருகுழி கதைபரப்பி வருகுது

இதில் உள்ள ஆகம சாத்திர உண்மை என் னென்டு மட்டும் சொல்லப்படயில்லை.

முக்கிய தினங்களைக் கணிக்கிறதில் வித்தியாசம், வேறுபாடு குறுபடி என்டு இருக்கிறது போல விரதங்கள் விஷயத்திலையும், சம்பிரதாயங்களிலையும் பெரிய 'அடிபிடி' அப்பா சனத்தைப் போட்டு வினாக்குளப்பி அடிக்கினம்

நண்பர் ஒருவரிட்டை ஏன் உந்தச் சனிக்கிழமை எல்லாவிலை விஷயத்திலும் சண்டை' என்டு கேட்டேன்.

சத்தி கொலு இருக்கும்போது சனிதோஷம் செய்யக்கூடாது என்டதாலதான் நவராத்திரி நாட்களிலை வாற சனிக்கிழமையளிலை எல்லாவிலை எரிக்கக் கூடாது என்பது விதி என்டு அவர் சொன்னார்..?

இந்த விஷயங்களிலை யார் சொல்லுறது சரி? எந்தஸ்தாபனம் 'ஒதோரிட்டி'? இப்ப யாக்கப் போறா எங்கடை சமய சம்பந்தமாய் ஏற்படுற நாள் - கோள் முரண்பாடு, சாத்திரக் கோளாறுகளை நீக்கி மக்களுக்கு சரியானதைச் சொல்ல ஒரு விசாரணை ஆணைக்குழு நியமிக்க வேணும்போலை இருக்கு. இப்ப அரசாங்கம் செய்ய வேண்டியது என்டு இல்லையே. எங்கடை பெடியவிட்டைசொன்னாசெத்து போடுவாங்கள்...

✶ ✶

அச்சாணியார் இண்டைக்குப் பத்திரியையார் மாநாடு ஒண்டு நடத்துகிறாராம் கொழும்பிலை.

அதி உத்தமரின் அன்பு மருமகன் பிரிகேடியர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்காவுற்றி கிளப்பப் பகிடிகளும் பாரதூரமான விஷயம் பற்றி அந்த மாநாட்டிலை ஏதாவது உத்தியோக பூர்வமாகச் சொல்லுவாரோ என்டு பத்திரியையார் எல்லாம் எதிர்பார்க்கினம்.

யாழ்ப்பாணத்திலைபுலி வலை அடக்கி, பயங்கரவாதத்தை வேரோடு களைய வந்த வீரச்சிங்கம் வீரதுங்கா ஆடியபடி மனித உரிமைகளை மீறிச் சித்திரவதை செய்தார் என்டு ஒரு தமிழர் ஒற்றஞ் சாட்டியிருக்கிறார்.

வீரதுங்கா இப்ப தூதுவராக இருக்கும் கனடா நாட்டு அரசுக்கும் அந்தக் குற்றச்சாட்டுக்குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அந்தக் குற்றச்சாட்டு கனடா, பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகைகளில் மக்கம் பக்கமா வெளிவந்திருக்குதாம் தெரியுமே வேணுமென்டால் நான் சொல்லுற குற்றச்சாட்டுக் குறித்து வீரதுங்காவுடன் நேரில் விளாசிக்கவும் தயார் என்டு பிரான்ஸ் வாசகனான இலங்கைத் தமிழரான உமாமகேஸ்வரன் தெரிவித்திருக்கிறாராம்

இதை அறிஞ்சோ என்னவோ அரசாங்க உயர்பீடம் இன்னும் ஒத்தியோ பூர்வமாக எதையும் சொல்லாது 'அப்பீப்' எண்டு இருக்குது. அச்சாணியார் மட்டும் தனிப்பட்ட முறையில் கனவு தெரிவித்திருக்கிறார்.

ஆனால் பெரிய இடத்துச் சம்பந்தத்தோடு(கூட்டோடு) வவுனியாப் படு கொலைகள் நடந்த பிறகு தான் வீரதுங்க தன்னை பெரிய பதவியிலை சேவை நீடிப்புக் கேக்காமல் நீக்கினவர் என்டு ஆப்ப ஒரு கதை அடிபட்டது.

'அது எதுவோ ... எப்படி எப்படியோ? எந்த ரகசியம் என்டாலும் ஒரு காலத்திலை வெளிச்சத்துக்கு வரும் என்டு நான் அடிக்கடி சொல்லுறது உதுக்காகத் தான் ..

தமிழருக்கு விஸா வழங்க அமெ.தூதரகம் கெடுபிடி

கொழும்பு, செப். 23

அமெரிக்கா செல்ல விண்ணப்பிக்கும் இலங்கைத் தமிழர் விஷயத்தில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கடுமையான விசாரணைகளை நடத்தத் தொடங்கியிருக்கின்றனர் கெடுபிடிகளை விதிக்க ஆரம்பித்துள்ளர்.

கடந்த மாதத்திற் கிருந்தே இந்த நடைமுறை தமிழ் இளைஞர்களின்

கோரிக்கைகளை உடன் நிறைவேற்றுக

வற்புறுத்துகிறது கூட்டுக்குழு

யாழ்ப்பாணம், செப் 23

பூரண முராமிலும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றும்படி வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு அரசை வற்புறுத்திக் கேட்டுள்ளது

அடிப்படை மனித உரிமைகள் நாள்தோறும் தனமான முறையில் மிறப்படுவதுடன் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை மனிதாபிமானமுள்ள எந்த சக்தியாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தவகை கொடூரமான செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பேசும் மக்களை ஆகதிகளாக்கும் சற்கு அரசாங்கம் நிட்டமிட்டு மேற் கொண்டு வரும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

சாதாரண அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதும் சிறையில் சித்திரவதை செய்யப்படுவதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

தொழிலாளி வர்க்கமும் ஏனைய முற்போக்கு வாதிகளும் இந்த கொடுமைகளுக்கு எதிராக ஐக்கியப் பட்டு குரல் கொடுப்பதுடன் இவற்றை எதிர்த்து போராட்டங்களை நடாத்துவதற்குத் தங்களைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

— இவ்வாறு வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக்குழு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வல்வை ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகொப்டர்கள் உதவிக்கு அழைக்கப்பட்டன

அவை வல்வை நகரைச் சுற்றி வட்டமிட்டபடி தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல்கள் நேற்றுக் காலை 8 30 மணி தொடக்கம் நண்பகல் வரை நீடித்தன

புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று அறியப்படுகிறது.

யாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் மீண்டும் அந்த உதவிகளை வழங்க சம்மதிப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் இன்னொரு தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

உபதலைவர் திரு எம். எஸ் சுந்தரலிங்கம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். (உ-எ)

கோட்டை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந. என் சின்னப்பன் (60 வயது) அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இவருடையசடலத்தை 'புலிகாட்' போராளிகள் மீட்டெடுத்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்

இவர் 11 பிள்ளைகளுக்குத் தந்தை.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை திரு. க. கேசவன் மேற்கொண்டார்.

இவருடன் ஆட்டத்தை 'புலிகாட்' போராளிகள் மீட்டெடுத்த யாழ் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்

இவர் 11 பிள்ளைகளுக்குத் தந்தை.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை திரு. க. கேசவன் மேற்கொண்டார்.

ஐயனார் சுப்பிரமணியம் (வயது 55) என்பவர் புலிகளுவெட்டச் சென்றபோது காயமடைந்தார் இவருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது. (உ 10)

மட்டக்களப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர். வேலைகள் நடைபெறவில்லை. வங்கிகள் பூட்டப்பட்டிருந்தன.

அரசபஸ், தனியார் பஸ் போக்குவரத்துக்கள் கூட இடம்பெறவில்லை.

வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. நகருக்கு வந்த ஆயுதப் படையினரின் வற்புறுத்தலில் சில கடைகள் திறக்கப்பட்டன

பின்னர் பஸ் நிலையத்தில் ஒண்டு வெடிப்புச் சத்தங்கள் இடம் பெற்றன அதைத் தொடர்ந்து திறக்கப்பட்ட கடைகள் மீண்டும் மூடப்பட்டன.

ஜன நடமாட்டம் குறைந்தது. நண்பகலு க்குப்பின்னர் நகர்வெறிச்சோடிக் காணப்பட்டது.

ஹர்த்தால் தொடர்ந்து வியாழக்கிழமை வரை நடைபெறும்.

இதனிடையில் நேற்றுக்காலை தவிர்த்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணிக்கு மீண்டும் அமுலுக்கு வந்தது. இன்று காலை 5 மணியுடன் ஊரடங்குச்சட்டம் நீடிக்கப்பட்டது. (உ-எ)

சேமலாபநிதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யர்களுக்கு சேமலாப நிதி கணக்குப் புத்தகங்களை வழங்க தொழிற் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது

சேமலாப நிதிக்குப் பணம் செலுத்தும் ஊழியர்களுக்கு [illegible] கணக்குப் புத்தகங்களை வழங்கும் நடவடிக்கையில் தொழிற் திணைக்களத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டது தெரிந்ததே. (உ-எ)

பீரங்கி, ஷெல் தாக்குதல்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வல்வை இராணுவ முகாமில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் பற்றுக்கு மேற்பட்ட தடவை மேற்கொள்ளப்பட்டன. ஷெல் தாக்குதல் இரண்டு தடவை இடம்பெற்றன.

இத்தாக்குதல்களின் போது மஞ்சை நிறமான புகை வெளி வந்தது. இது நச்சுப்புகையாக இருக்கலாம் என்று மக்கள் அச்சம் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் தாக்குதல் தொடர்ந்து நடந்த சமயம், கடற்படையின் இரண்டு லப்பல்கள் வல்வை இராணுவ முகாமை நோக்கியபடி ரோந்து சென்றன.

இத்தாக்குதல்களினால் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மூடப்பட்டன, மக்கள் பாதுகாப்புத் தேடிச் சென்ற வண்ணம் இருந்தனர். (உ-இ-160)

முல்லைத்தீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்த ஷெல் குண்டு ஒன்றினால் தென்னைமரத்தில் சிறிய தொழிலில் ஈடுபட்டிருந்த ஒருவர் உயிரிழந்தார்.

ஷெல் தாக்குதலினால் குடல் வெளியே வந்த நிலையில் மரத்தில் உச்சியிலிருந்து அவர் விழுந்தார்.

தென்னை மரத்திற்குக் கீழ் அவர் விழுந்த இடத்தில் இரத்தம் நாலாபுறமும் சிதறிக் கிடக்கக் காணப்பட்டது.

சம்பவத்தைக் கேள்வியுற்ற பொலிஸ் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

ஷெல் தாக்குதலினால் காக்கை நடைகள் பல [illegible] தந்தன. வீடுகள், [illegible] சேதமடைந்தன. [illegible] காயமடைந்தனர். (உ - 93)

இந்தியாவுக்கு: 'கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை'
ஆஸ்திரேலியாவுக்கு: 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்'

சமநிலையில் முடிவடைந்த சரித்திர பிரசித்தி பெற்ற டெஸ்ட்

சென்னை செப். 23

ஆஸ்திரேலிய- இந்திய அணிகளுக்கு இடையில் சென்னைசேப்பாக்கமைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி, கிரிக்கெட் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற ஒரு ஆட்டமாக நேற்று முடிவடைந்தது.

இரு அணிகளும் ஒரே வளவு ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது இந்த ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இந்தவகை முடிவுகள் டெஸ்ட் ஆட்டங்களில் ஏற்படுவது வெகு அபூர்வம்.

இது டெஸ்ட் சரித்திரத்தில் இரண்டாவது சம்பவமாகும்.

மிகப் பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வெற்றிக்கனியை மயிரிழையில் கோட்டைவிட்டது இந்திய அணி. மயிரிழையில் தோல்வியிலிருந்து தப்பிக்கொண்டது ஆஸி அணி.

இந்த ஆட்டத்தில் வெற்றி கிடைக்கும் சந்தர்ப்பம் மாறி,மாறி இரு அணிகளுக்கும் கிட்டியிருந்தது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி 7 விக்கெட் இழப்புக்கு 574

கவாஸ்கர்

ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றி முன்னணியில் நின்றவாறு முதல் இன்னிங்ஸை தானே முடித்துக்கொண்டது.

தினறிய இந்தியஅணி அடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி திக்கித் திணறி தோல்வியைப் பாதையில் சாய்ந்து பின்னர் ஒருவாறு சமாளித்து 397 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பின்னர் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி நான்காம் நாள் ஆட்ட முடிவின்போது 5 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. ஆச்சரியம்

ஐந்தாவதும் இறுதியுமான ஆட்ட தினம் நேற்று ஆச்சரியத்துடன் ஆரம்பமானது.

முதல் நாள் ஓட்டவெண்ணிக்கையுடன் தமது பக்க துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொள்வதாக ஆஸி அணித் தலைவர் அலன் போர்டர் அறிவித்ததே அதற்குக் காரணம்

வெற்றி சட்டுவதற்கு 348 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி வேகமாக ஓட்டங்களைக் குவித்து வெற்றிலை நோக்கி நடைபோட்டது.

ஒரு கட்டத்தில் இந்திய அணியின் வெற்றி உறுதியாக இருந்தது.

ஆனால் ஆட்டம் முடிவடைவதற்கு ஒரு மத்த இருக்கையில் இந்திய அணி 347 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது. அதனால் ஆட்டம் வெற்றித் தோல்வியின்றி முடிவடைந்தது.

நேற்றைய ஆட்டத்தில் கவாஸ்கர் அற்புதமாக துடுப்பெடுத்தாடி 90 ஓட்டங்களைப் பெற்றார்.

சிறிகாந்த் 39, அமரநாத் 51, சந்திரகாந்த் கண்டித் 39, சேட்டன் சர்மா 23, ரவிசாஸ்திரி ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களைப் பெற்றனர். (உ)



திருமலை: 2,500 தமிழ் அகதிகளை சீனன்வாடிக்கு மாற்ற முயற்சி

பிரசைகள் குழு, தொண்டர் ஸ்தாபனங்கள் எதிர்ப்பு

திருகோணமலை,செப்.23

திருமலை நகரில் 3 வாடசாலைகளில் தங்கியுள்ள சுமார் 2,500 தமிழ் அகதிகளை எட்டு மைல் தொலைவில் உள்ள சீனன் வாடிக்கு கொண்டு செல்லும் முயற்சியை திருமலை மக்கள் பிரசைகள் குழு, தொண்டர் ஸ்தாபனங்கள் பலமாக எதிர்த்துள்ளன.

சீனன் வாடியில் உள்ள 'கிளப்பன் பேக்' என்னும் இடத்தில் உள்ள அரசாங்க கட்டடங்களில் இவர்களை வைத்துப் பராமரிக்க இராணுவ இணைப்பதிகாரி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அதற்குத்தான் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

அகதிகளை அந்த இடத்துக்குக் கொண்டுபோவது அகதிகளுக்கு பாதுகாப்பாக இருக்காது என்ற காரணத்தினாலே எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகள் தற்சமயம் திருமலை சென்போசப் தமிழ்ப் பாடசாலை, செம். போசப் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றில் தங்கியுள்ளனர்:

(உ-எ150)

சடலத்தை மீட்க போராளிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், செப். 23

கோட்டையிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினால் மரணமான நாகன் சின்னப்பனின் சடலத்தை மீட்பதற்கு முயற்சித்த போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் அரை மணி நேர துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றது.

கே. கே. எஸ். வீதியில் தபால் கந்தோருக்கு அருகில் இவர் மாடுகளை தூக்கி வரும்போது கோட்டையிலிருந்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நெஞ்சில் குடுபட்டு துடித்துக் கொண்டிருந்த அவரை மீட்பதற்கென "புளொட்" போராளிகள் பெரும் பிரயத்தனம் செய்தனர்.

தொடர்ந்தும் அவரை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

சடலத்திற்கு அருகே செல்ல முடியாத நிலையில் போராளிகள் அவர் மீது கவிற்றியை விட்டெறிந்தனர்.

அப்பொழுதும் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

"புளொட்" போராளிகளுக் திருப்பித் துப்பாக்கிப் மேற்கொண்டனர்.

எனினும் மீட்கப்பட்ட போது சின்னப்பனின் உயிர் பிரிந்து விட்டது.

பல்கலைக் கழக..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டத்தை விரிவுபடுத்து முகமாக பாடசாலைகளில் மாணவர்களுடன் கலந்துரையாடலையும் கருத்தரங்குகளையும் மேற்கொள்ளுவதற்கு அதிகாரிகளின் ஒத்துழைப்புகளையும் வேண்டி நிற்கிறோம்.

தொழிற் சங்கங்களையும், வெகுஜன ஸ்தாபனங்களையும் இப்போராட்டத்திற்கு ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம். 24 ஆம் திகதி புதன்கிழமை 4 மணிக்கு மாணவர் பொது அறையில் சந்திக்குமாறு மேற்படி அழைப்புக்களை கேட்டுக்கொள்கின்றோம்.

25 ஆம் திகதி எமது போராட்டம் ஆரம்பமாவதால், அன்று தொடக்கம் நடைபெறவிருந்த பரீட்சைகள் யாவும் ரத்துசெய்யப்படவேண்டுமென நிர்வாகத்திடம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

[illegible] அறிமுகப்படுத்தியது தெரிந்ததே. (உ-எ)

தாக்குதல்

சாம்பல்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவும் ஆயுதப்படை முகாம் மீது போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

ஹோலிடைஒஷியானிக்கில் அமைக்கப்பட்டுள்ள முகாம்மீதுதான் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 01-11-1918

மறைவு: 25-08-1986

திரு. குழந்தைவேலு கதிரவேலு
(ஸ்தபதியார், மலையன் கடை, யாழ்ப்பாணம்)

அவர்களின் வீட்டுக்கிரியை 24-09-86 புதன் கிழமை நாளை நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதிய போசன விருந்திலும் பங்கேற்றுமாறு அன்புடைமையோடு அழைக்கின்றோம்.

234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், விக்டோரியா வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெடும், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி 23 • 09 • 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, Jaffna.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 40 N86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org